**O.S. No.93/20025**

**30.06.2026**

**வா.சா.1**

**திரு சுப்பிரமணிய அய்யர்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய அப்பா பெயர் ராமமூர்த்தி அய்யர், அம்மா பெயர் காமாட்சி அம்மாள். ராமமூர்த்தி அய்யரின் மூத்த தாரத்திற்கு ஒரே மகள் மங்களம். 2 ம் தாரத்திற்கான வாரிசுகள் நான், நாகராஜன், ஜெயராமன் அய்யர், அலமேலு, சத்தியநாராயணன், ரேவதி, மகாலிங்கம் ஆகியோர். நான் ஏற்கனவே விவசாயம் பார்த்துக் கொண்டிருந்தேன், தற்சமயம் எதுவுமில்லை. தாவா சொத்துக்கள் என் அப்பாவின் சொத்துக்கள். என் தாத்தாவிற்கு சொத்து இருந்தது. என் தாத்தாவிற்கு 3 மகள்களும் ஒரு மகனும் இருந்தார்கள். அந்த மகன்தான் என் அப்பா. என் தாத்தா சொத்துக்கள் அவரது மகள்களுக்கு கொடுக்கப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்கள் இறந்து விட்டார்கள். என் தாத்தாவின் சொத்துக்கள் என் அப்பாவிற்கு கிடைத்தது என்றால் சரி. என் அப்பா வக்கீல் குமாஸ்தாவாக இருந்தார். என் அப்பாவிற்கு என் தாத்தாவின் சொத்துக்களிலிருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு இதர சொத்துக்களை என் அப்பா வாங்கினார். பிறகு சாட்சி மாற்றி என் அப்பா சம்பாதித்துதான்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:01 +0530

சொத்துக்களை வாங்கினார் என கூறுகிறார். என் அப்பா ராமமூர்த்தி அய்யர் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. அந்த உயில் பதிவு செய்யப்பட்ட உயில் என்றால் சரி. அந்த உயிலில் என் கடைசி தம்பிகள் சத்தியநாராயணன், மகாலிங்கம் ஆகியோர் நிலங்களை ஏகதேசமாக அடைய வேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. வீட்டை நானும், என் தம்பிகள் நாகராஜன், ஜெயராமன் ஆகியோரும் ஏகதேசமாக அடைய வேண்டும் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. தாவா வழக்கு பாகப் பிரிவினை கோரியும் மோசடி பத்திரம் ரத்து செய்யவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மோசடி என காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.1 உயில்தான் ஆவணமாகும், வேறு ஆவணம் எதுவும் கிடையாது. வா.சா.ஆ.1ல் காமாட்சி அம்மாளை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் என் அப்பாவின் 2 வது மனைவி என குறிப்பிட்டுள்ளார்கள். வா.சா.ஆ.1ல் பக்கம் 3ல் என் 2வது சம்ஸாரம் மேல்கண்டவர்களுடன் வசிக்க அபிப்ராயப்படாமவிட்டால் முன்கட்டில் உள்ள மேல்புறம் தென்பக்கம் உள்ள சுவாமி படம் உள்ள அறையில் அவள் தனியே வசித்து வரவேண்டியது. அவள் ஜீவனத்திற்கும் ஏற்பாடு செய்துவிட்டேன் என்று கண்டுள்ளது என்றால் சரி. ஜீவனத்திற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் வா.சா.ஆ.1ல் சொல்லப்படவில்லை என்றால் சரி. சட்டப்படி ஜீவனத்திற்காக கொடுக்கப்பட்ட சொத்தானது அவர்களுக்கு சொந்த சொத்தாக மாறிவிட்டது என்றால்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:06 +0530

ஜீவனத்திற்காக ஒரு சொத்தும் தரப்படவில்லை. எங்களுடன்தான் அம்மா சாப்பிட்டு வந்தார். என் அப்பாவின் முதல் சம்சாரத்திற்கு சில கடமைகள் செய்ய வேண்டுமென்று உயிலில் கண்டுள்ளது என்றால் சரி, அதுபோல் நான் செய்து வந்தேன். தீபாவளிக்கு புடவை, பழங்கள் கொண்டு செல்வேன், மாதா ஒன்றுக்கு ரூ.300/- அனுப்பி வந்தேன். அவருடைய இறப்பு காரியங்கள் முதற்கொண்டு நான்தான் செய்தேன், வருடாந்தர திதி செய்து வருகிறேன். மேற்கண்டவற்றை நான் செய்து வருகிறேன் என்பதை காட்டுவதற்காக என்வசம் ஆவணங்கள் எதுவும் கிடையாது. வா.சா.ஆ.1ல் கண்ட A ஷெட்டியூல் சொத்துக்கள் யார் பெயரில் உள்ளன என்றால் என் அப்பா, தாத்தா பெயரில் மரியாதை காரணமாக வாங்கியது. தாத்தா அந்த சொத்தை என் அப்பா பெயருக்கு உயில் எழுதி வைத்திருந்தார். வீட்டை பொறுத்து 3 சகோதரர்களில் யாராயினும் வெளியூர் செல்ல நேரிட்டால் அவர்கள் மற்றவர்களிடம் ரூ.5,00,000/- பெற்றுக் கொண்டு பாத்தியத்தை சரண்டர் செய்து விட வேண்டியது என கண்டுள்ளது என்றால் சரி. உயிலில் என்னிடம்தான் சொத்தை விற்க வேண்டுமென்று எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரி. உயிலில் கண்ட சொத்தை என்னிடம்தான் கொடுக்க வேண்டுமென்று நாகராஜனை கட்டாயப்படுத்தினேனா என்றால் கொடுப்பதாக இருந்தால் என்னிடம் கொடு என்றுதான் சொன்னேன். ஜெயராமன் 2 ம் கட்டின் பின்புறம் கிழக்கு மேற்கு உள்ள ரூம்களில் வசிக்க

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:11 +0530

வேண்டியது என கண்டுள்ளது என்றால் சரி. நான் விவசாயத்திற்கு வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. 17.06.2009 தேதியிட்ட கிரய பத்திரத்திற்கான கிரய தொகை எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 11.06.2009 அன்று சென்னையிலிருந்து என் வங்கி கணக்கிலும் என் மனைவியின் வங்கி கணக்கிலும் ரூ.4,00,000/- போடப்பட்டது. 15.06.2009 அன்று என் மனைவியின் வங்கி கணக்கிலிருந்து ரூ.3,00,000/- எடுத்துள்ளேன். அதே தேதியில் என்னுடைய வங்கி கணக்கிலிருந்து ரூ.2,00,000/- எடுத்துள்ளேன். ஆக கூடுதல் ரூ.5,00,000/-யை ஆயக்காரன்புலம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வங்கி வரைவோலை எடுத்தேன். நான் வருமான வரியே கட்டியதில்லை. எனக்கு மேற்படி ரூ.5,00,000/- தொகை எப்படி வந்தது என்றால் என்னுடைய வருமானத்திலிருந்து வந்ததுதான். ஜெயராமனின் பிரிபடாத பாக சொத்தை அவரது மனைவி சுபாஷினி கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார், மைனர்களுக்காகவும் கிரயம் செய்து கொடுத்தார். சட்டப்படியாக என் அம்மாவும் ஜெயராமனின் வாரிசு என்பது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞரிடம் சட்ட கருத்து கேட்டேனா என்றால் கேட்கவில்லை. இறந்த ஜெயராமனுக்கு அவரது தாயாரும் ஒரு வாரிசு என சொல்வதை என்னால் மறுக்க இயலாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் கிரயம் செய்தால் ரூ.5,00,000/- கொடுத்து கிரயம் செய்து கொள்ள வேண்டும் என்று உயிலில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:16 +0530

காணப்படவில்லை என்றால் சரண்டர் செய்ய வேண்டும் என்ற முறையில் நான் கிரயம் செய்துள்ளேன்.ஜெயராமனுடைய பிரிபடாத 1/3 பாகத்தை அவருடைய வாரிசுகளிடமிருந்து நான் கிரயம் பெற்ற கிரய சாசனமானது என் அம்மா பாகத்தை கொடுக்காததால் முழுமையடையவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஜெயராமனுடைய பங்கில் தாயாருக்கு உள்ள பங்கு அப்படியே இருந்துவருகிறது என்றால் கிடையாது. காமாட்சியம்மாளின் பாகம் ஜெயராமன் பாகத்தில் கிடையாது என்று எந்த அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் 17 வருடங்களாக எந்தவிதமான ஆட்சேபனையும் செய்யவில்லை என்பதால் அவ்வாறு சொல்கிறேன். எனக்கு சட்டம் தெரிந்து பதில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரிந்தவற்றை சொல்கிறேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் யாவும் சரியல்ல என்று சொன்னால் தவறு. காமாட்சியம்மாளுக்கு கிடைத்த சொத்து வாரிசுரிமை சட்டப்படி அவருக்கு ஏகதேசமான உரிமையானது என்றால் கேள்வியே தவறு. செட்டில்மெண்ட் எழுதி வைப்பதற்கு காமாட்சியம்மாளுக்கு உரிமையுண்டு என்றால் அவருக்கு சொத்தே கிடையாது. காமாட்சியம்மாளுக்கு சட்டப்படியான உரிமையுண்டு என்று தெரியுமா என்றால் எந்த உரிமையும் கிடையாது. செட்டில்மெண்டை பொறுத்து 2023 ல்தான் எனக்கு தெரியும் என்றால் 06.02.2023 அன்றுதான் எனக்கு தெரியும். இது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:21 +0530

சம்மந்தமாக மாவட்ட பதிவாளர், காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு மனு கொடுத்தேன், அதற்கு எந்த பதிலும் இல்லை. 2023 ல் எனக்கு விஷயம் தெரிந்தபின் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கறிஞர் எனக்கு விஷயம் தெரிந்து 3 வருடம் வரை டைம் இருப்பதாக சொன்னதால் 2025 ல் வழக்கு தாக்கல் செய்தேன். செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் பார்ட்டி இல்லை எனவும் நான் 3 ம் நபர் எனவும் சொன்னால் சரிதான். செட்டில்மெண்ட் பொறுத்தவரை ஏற்கனவே உண்மை தெரிந்தும் தெரியாது என தற்சமயம் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. செட்டில்மெண்ட் பற்றிய விபரம் எனக்கு, என் மனைவிக்கு மற்றும் குடும்பத்தில் உள்ள இதர நபர்கள் அனைவருக்கும் தெரியுமென்று சொன்னால் யாருக்கும் தெரியாது. என் தாயாரை ஏமாற்றியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. என் தாயாரை ஏமாற்றியதாக சொல்லுவது என் வாய்மொழியானதுதான் என்றால் சரி. நான் வீட்டை விட்டு 2020 ல் சென்று விட்டேன், 2023 ல் வீட்டிற்கு திரும்ப வந்துவிட்டேன். என் சொத்துரிமைக்கு எதிராக பிரதிவாதி செயல்பட்டு வருவதால் உயிலில் கண்டவாறு ரூ.5,00,000/- பெற்றுக்கொண்டு என் பெயருக்கு பிரதிவாதி உரிய ஆவணம் எழுதி கொடுக்க

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:25 +0530

கடமைபட்டவராவார் என்று நான் சொல்லியுள்ளது உயிலில் உள்ளதா என்றால் அவ்வாறு உயிலில் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு நான் அனுப்பினேன், பதிலறிவிப்பும் வந்தது. வரிசை கிரமப்படி என உயிலில் கண்டுள்ள வார்த்தையானது எங்கள் 3 மகன்களில் முதல் மகன், 2 வது மகன், 3 வது மகன் என்ற வரிசையை குறிப்பிடுகிறது என்றால் சரி. உயிலில் சொத்தை மூன்றாக பிரிக்கவில்லை என்றால் பிரிக்கப்பட்டுள்ளது. உயிலில் சொத்து பிரிக்கப்பட்டுள்ளதாக நான் சொல்லியுள்ளேன் அப்படியெனில் இந்த வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஜெயராமன் பாகத்தை நான் வாங்கிய கிரய பத்திரத்தில் பிரிபடாத வீதம் என்று எழுதப்பட்டுள்ளது, அது தவறா என்றால் அதுபற்றி எனக்கு புரியவில்லை. நாங்கள் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோம் என்றால் இல்லை, நானும் என் மனைவியும் தனி சமையல், நாகராஜன் அவரது மனைவி தனி சமையல். காமாட்சியம்மாள் இருந்தவரை தனி சமையல் என்றால் இல்லை, அவர் எல்லோருடனும் சேர்ந்து சாப்பிட்டு வந்தார். உயில்படி நாகராஜனுடைய பாகம் என்பது கிணற்றுக்கு மேல்புறமும் கீழ்புறமும் உள்ள ரூமில் வசிக்க வேண்டியது என்றால் ஆமாம், அவ்வாறு வசித்து வருகிறார். உயில்படி நாகராஜனுக்கு உரிய உரிமைகளை இல்லையென சொல்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் என்ன உரிமை என்று

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:30 +0530

எனக்கு புரியவில்லை. நான் 2020 ல் நான் வீட்டை விட்டு வெளியில் செல்லும்போது ரூ.5,00,000/- கொடுத்து விட்டு சென்றேனா என்றால் இல்லை, நான் ஜாகைதான் மாறினேன், விற்கவில்லை. உயில்படி எனக்குள்ள உரிமையில் நாகராஜன் தலையிடவில்லை என்றால் எனக்கு புரியவில்லை. உயிலில் கண்டபடி முன்கட்டு முன்பாகம் நானே ஏகதேசமாக அடைய வேண்டியது என காணப்படவில்லை என்றால் தவறு. சொத்தின் மொத்த விஷ்தீரணம் எவ்வளவு என்றால் 81 குழி. மொத்த விஷ்தீரணம் உயில்படி 33 செண்ட். ஆனால், 27 செண்டுதான் உள்ளது. ஏனெனில் ரோடு பக்கம் கொஞ்சம் போய்விட்டது, ரோட்டிற்கு அந்த பக்கம் உள்ள நபர் கொஞ்சம் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். வழக்குரையில் நான் 33 செண்ட் என உயிலில் உள்ளபடி சொல்லியுள்ளேன். வழக்குரையில் ஆக்கிரமிப்பு செய்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரி. உயிலில் பொது புழக்கங்கள் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. வாசல் ஆரம்பத்திலிருந்து கொள்ளை பக்கம் வரை பொதுபுழக்கம் என்று உயிலில் கண்டுள்ளது என்றால் சரி. அந்த பொதுபுழக்கத்தில் எல்லா பாகஸ்தினருக்கும் உரிமையுண்டு என்றால் முதல் 2 பாகத்தில் மட்டும் உரிமையுண்டு. பொதுபுழக்கங்களை தடுக்க எனக்கு உரிமை கிடையாது என்றால் சரி. கொள்ளைபக்கத்தில் மாடு கட்டி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:34 +0530

வருகிறார்களா என்றால் நாகராஜன் கட்டி வைத்துள்ளார். மாடு, கன்றுகளை கொள்ளைபுறமாக அவர் அழைத்து வந்து அழைத்து செல்கிறார் என்றால் இனி அனுமதிக்க முடியாது, நான் வாங்கி 16 ஆண்டுகள் ஆகிறது. என் தம்பி ஜெயராமனிடமிருந்து வாங்கிய இடத்தில் நான் தனியாக சுவர் எடுத்துள்ளேன். பின்பக்கம் உள்ள 13 அடி மர கேட் உடைந்து விட்டது. அந்த கேட்டை பயன்படுத்திதான் மாட்டிற்கான தீவனங்கள், வைக்கோல் வருகிறது என்றால் இல்லை, வாசல் வழியாக வரும். வா.சா.ஆ.3 கிரய ஆவணத்தில் 11 செண்ட் என கண்டுள்ளது என்றால் சரி, உயிலில் கண்ட 33 செண்ட் கணக்குபடி 11 செண்ட் என குறிக்கப்பட்டது. ஆனால், 9 செண்டுதான் உள்ளது. மேற்படி விபரத்தை நான் என் பிராதில் சொல்லவில்லை என்றால் சரி. மூத்த மகன் என்பதால் முதல் பங்கு எனக்கு என்று நான் தவறாக கட்சியாடுகிறேன் என்றால் இல்லை, வரிசை கிரமப்படி சொல்லப்பட்டுள்ளது. சொத்து குறித்து வரைபடம் ஏதாயினும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் 2009 குடும்ப அட்டை எனக்கு 49 வயதாகும் காலத்தில் வழங்கப்பட்டது என்றால் சரி. அசல் வீட்டில் உள்ளதா என்று எனக்கு தெரியவில்லை, தேடி பார்த்தால்தான் தெரியும். குடும்ப அட்டை எண் 19 / G / 0321266 ன் ஜெராக்ஸ் நகல் **பி.சா.ஆ.1** (பி.சா.ஆ.1 யை குறியீடு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:39 +0530

செய்வதற்கு வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. AIR 2001 SC 1158 தீர்ப்புரையை பின்பற்றியும் நீதியின் நலன் கருதியும் குறியீடு செய்யப்படுகிறது). நான் கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் தவறு. காமாட்சி அம்மாள் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பொறுத்து நான் கேள்வி கேட்க இயலாது என்றால் அது மோசடி பத்திரமாகும். காமாட்சி அம்மாளுக்கு ஜெயராமனுக்குரிய பாகத்தை மறைத்து நான் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் தவறு. ஆண் வாரிசுகளுக்கு மட்டும்தான் உரிமை என்று உயிலில் சொல்லப்பட்டுள்ளது. என்னுடைய பாகம் எனக்கு கிடைத்தால் போதுமானது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.06.30 16:13:44 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.